**கவனிக்க.-** *11.11.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1733 - 2011 නොවැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2011.11.18

*1733 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# *பகுதி II - சட்ட சம்பந்தமானது*

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 138 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2011, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நானாவித அறிவித்தல்கள்

## கம்பனியை ஒடுக்குவதற்கான விண்ணப்ப அறிவித்தல்

கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்
(அதன் குடியியல் நியாயாதிக்கத்தில்)

கொழும்பு 7, புல்லர்ஸ் ஒழுங்கை, 3 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ரன் மாலு ஃபாசன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் (Ran Malu Fashions (Private) Limited) விடயத்தில் ;

எச். சி. (சிவில்)
இல. 50/2011/
சி. ஓ.

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 12 ஆம் பகுதியின்கீழ் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான மனு குறித்த விடயத்தில் ;

கொழும்பு 7, புல்லர்ஸ் ஒழுங்கை, 3 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ரன் மாலு ஃபாசன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

........................ மனுதாரர்.

மேற்கூறப்பட்ட கம்பனியை கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தில்) ஒடுக்குவதற்கான விண்ணப்பம் 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி கொழும்பு 7, புல்லர்ஸ் ஒழுங்கை, இல. 3 இல் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள ரன் மாலு ஃபாசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் இனால் மேற்குறித்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன் விசாரிக்க உத்தரவிடப்பட்டு உள்ளது. மேற்குறித்த மனு சம்பந்தமாக மேற்குறித்த கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது ஆதரவு அல்லது எதிர்ப்புக் கட்டளை பிறப்பிக்க விரும்பின் விசாரணையின்போது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அந்நேரத்திற்கான பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் மேற்படி கம்பனிக்கு எந்தவொரு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்கு தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி கீழ்க்குறிப்பிடப்பட்டவரினால் அதற்குரிய கட்டணத்தின்படி பணக்கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

முருகேசு அன்ட் நீலகண்டன்,
மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள்,
"எம் அன்ட் என் கட்டிடம்" (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 3.

**குறிப்பு**.- மேற்குறித்த மனுவில் விசாரணையின்போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொண்டிருப்பின் அவர் அல்லது அவரின் நோக்க அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணிகள் முருகேசு அன்ட் நீலகண்டன் நிறுவனத்திற்கு நேரில் அல்லது கடித மூலம் சமர்ப்பிக்க வேண்டும். அல்லது கம்பனியாயின் கம்பனியின் பெயர், விலாசத்துடன் நபரினால், கம்பனியினால் அல்லது அவரது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியினால் (அவ்வாறு இருப்பின்) கையொப்பமிடப்பட்டு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படலாம். தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் மேற்குறித்தவருக்கு போதிய கால அவகாசத்துடன் 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி மாலை 6.00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

முருகேசு அன்ட் நீலகண்டன்,
மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள்.

11-376

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.